# எசேக்கியேல்

## பெரிய தீர்க்கதரிசனம்



*“நான் கர்த்தர் என்பதை அறிந்து கொள்வார்கள்” – எசே 25:11*

**சகோ. R. ஜோஸ்**

மகாதானபுரம்

கிறிஸ்துவின் சபை

9486741399

# எசேக்கியேல்

**முன்னுரை:**

எசேக்கியேல் புத்தகம் பழைய ஏற்பாட்டின் பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் என்ற பிரிவில் ஒரு பிரிவாக இருக்கிறது. இந்த புத்தகம் அடையாளமொழியிலும், குறிப்படையாளங்களிலும் எழுதப்பட்டது. எசேக்கியேல் புத்தகம், பிரசங்கியாருக்கு இருக்கிற இருமடங்குப் பணிப்பொறுப்பைக் காண்பிக்கிறது, தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிப்பவர்களும், போதிப்பவர்களுமாயிருக்கிற நமக்கு, ஒவ்வொருவரையும் மனம்மாற்றும் பொறுப்பு இருப்பதில்லை, தேவனுடைய செய்தியை உண்மையுடன் அறிவிக்கும் பொறுப்பு உள்ளது (எசே 2:3-5; அப் 20:26,27), அதைப்போலவே இந்த புத்தகம் நம்மை எச்சரிக்கிறது, இஸ்ரவேல் ஜனங்கள் செய்த தவறைப்போலவே நாம் இன்று தேவனுக்கு விரோதமாய் தவறும், துரோகமும் செய்ய கூடாது என்கிற செய்தியை இது நமக்கு கொடுக்கிறது (ரோம 15:4), நம் எல்லாருடைய நோக்கமும் தேவனை பிரியப்படுத்துவதாகவே இருக்க வேண்டும், அதற்கான நல்ல பாடங்களை இந்த புத்தகம் நமக்கு கற்று தருகிறது, நாம் நமது சொந்த பாவங்களுக்கும் அவற்றின் விளைவுகளுக்கும் வேறொருவரைக் குற்றம்சாட்ட முடியாது, நாம் நம்முடைய சொந்த தவறுகளுக்காய், வருத்த வேண்டும் என்பதோடு மனம் மாற வேண்டும் என்கிற பாடத்தையும் நமக்கு கற்று தருகிறதாக இந்த புத்தகம் இருக்கிறது (எசே 18:2-4; எசே 18:19,20).

**புத்தக பிண்ணனி:**

1. ஆசிரியர்
    - a. எசேக்கியேல் (1:3); எசேக்கியேல் என்பதற்கு தேவன் பெலப்படுத்துவர் என்று பொருள் வருகிறது.
    - b. எசேக்கியேல் யோயாக்கீன் ராஜாவின் ஆட்சி காலத்தில் (கி.பி 597) (1:3; 2 இராஜா 24:8-16) கைதியாக பாபிலோனுக்கு கொண்டுப்போகப்பட்டார்(1:1), இவருடன் கூட அதிகமான (10,000) யூதா ஜனங்கள் பாபிலோனுக்கு கொண்டு செல்லபட்டனர்.
        - i. இது முதன் முறையல்ல, இதற்கு முன்பு யோயாக்கீமின் ஆட்சியில் (கி.பி 606) நேபுகாத்நேச்சார் சில வாலிபர்களை பாபிலோனுக்கு அடிமையாக கொண்டு சென்றிருந்தார், அதில் தானியேலும் ஒருவர் (தானி 1:1-3)
        - ii. இதன் பின்பு கி.பி 586 -யில் சிதேக்கியாவின் ஆட்சி காலத்தில் நேபுகாத்நேச்சார் எருசலேமையை முழுவதுமாக அழிந்துப்போட்டான் (2 இராஜா 25:7-9). இந்த காலகட்டத்தில் தான் எரேமியா ஊழியம் செய்து கொண்டிருந்தார்.
        - iii. எசேக்கியேலும், தானியேலும் ஒருவரை ஒருவர் நன்று அறிந்திருத்திருக்கலாம் (எசே 14:14, எசே 28:3).

c. எசேக்கியேலின் தகப்பன் பெயர் பூசி என வசனம் நமக்கு கூறியிருக்கிறது (1:3), இவர் தகப்பனின் ஆசாரியனாய் இருந்தார், அதைப்போலவே இவரும் ஆசாரியனாய் இருந்தார். தேவனுக்கு ஊழியம் செய்வதே ஆசாரியர்களின் வேலையாக இருந்தது (எபி 5:4)

d. கைது செய்யப்பட்டு செல்லும் இவரின் வயது 25 யாக இருந்திருக்கலாம். கல்தேயர்களின் (பாபிலோன்) கேபார் நதியண்டையில் இவருடைய தங்கும் இடம் இருந்தது (1:1,3), இவருக்கு சொந்தமான வீடு இருந்திருக்க வேண்டும் (எசே 8:1 இவர் திருமணமான ஒருவராக இருந்தார் என்பதோடு இவரின் மனைவி இறந்திருந்தார் (எசே 24:18), பாபிலோனில் ஊழியம் செய்கிறவராயும், அங்கு இஸ்ரவேல் மூப்பர்களில் எசேக்கியாவிடம் வந்து விசாரிக்கிறவர்களாய் இருந்தார்கள் (எசே14:1,20:1).

e. ஒரு தலைவருக்கு தேவையான இரண்டு முக்கியமான குணங்களை நாம் எசேக்கியாவிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும், அவர் தன்னுடைய ஊழியத்தை (நேசித்தார்), அவர் தன்னுடைய ஜனங்களை நேசித்தார்.

f. **எசேக்கியேலுக்கு இருந்த சவால்கள்:**

   i. எரேமியாவைப்போலவே எசேக்கியேலுக்கும் தன்னுடைய வேலையில் பல சவால்கள் இருந்தது.

   ii. எரேமியா தன்னுடைய ஊழியத்தை எருசலேமில் செய்தார், ஆனால் எசேக்கியேல் தன்னுடைய வேலையை பாபிலோனில் கைதியாக இருக்கும் போது செய்தார் என்பது அவரின் ஊழியத்தில் இருக்கும் சவாலையை நமக்கு காண்பிக்கிறது.

   iii. அடிமைகளாய் சென்றிருந்த நேவனுடைய ஜனங்களுக்குள் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவருக்கான சவலாய் இருந்தது. (எசே 37:11-14), அதைப்போலவே கள்ள போதகர்களால் கட்டப்பட்ட தவறான நம்பிக்கை உடைந்துப்போடுவதும் இவரின் வேலையாக இருந்தது. (எசே34)

   iv. இந்த அடிமைத்தனம் 70 வருடம் மட்டுமே என்பதால், இந்த காலத்தில் தேவனுடைய ஜனங்கள் தங்களை சுத்தம் செய்து கொள்ள வேண்டியது, அவசியமாக இருப்பதால் அதற்காக அவர்களை மனம்திரும்ப படி பிரசிங்கிப்பதும், அவர்களை எச்சரிப்பது எசேக்கியேலின் வேலையாக இருந்தது(எசே 33:10).

2. **வரலாற்று பிண்ணனி:**

   a. எசேக்கியா ராஜாவின் நாட்களில் யூதா ஜனங்கள் தேவனிடம் திரும்பப்பட்டார்கள், இதற்கு எசேக்கியா ராஜா எடுத்த சீர்திருத்தங்கள் காரணமாய் இருந்தது. (2 நாளா 31:20,21), இதன் பின் மனாசே என்கிற யூதா இராஜா ஜனங்களை தவறான பாதையில் வழி நடத்தியதாலும்,

ஜனங்கள் தேவனை விட்டு விலகினாதலும் தேவன் யூதாவை தள்ளிவிட்டார் (2 இராஜா 24:3,4)

b. இதன் பின்பு யோசியா என்கிற நல்ல இராஜா யுதாவை மறுப்படியும், தேவனிடம் கொண்டுவரும்படி முயற்சி செய்தான்(2 இராஜா 23:1-3), ஆனாலும் யோசியா ராஜாவிற்கு பின்பு அவனுடைய பிள்ளைகளாகிய யோயாக்கீம் ஆட்சியில் பாபிலோன் ராஜா வந்து சில யூதா ஜனங்களை சிறைப்பிடித்துக்கொண்டு பாபிலோனுக்கு சென்றான் (தானி 1:1-3; 2 இராஜா 24:1-7), பின்பு யோயாக்கீன் ஆட்சியில் மறுபடியும் நேபுகாத்நேச்சர் யூதா முற்றுகையிட்டு அதிகமான ஜனங்களை சிறைப்பிடித்துக்கொண்டு சென்றான். (2 இராஜா 24:10-17) இந்த காலகட்டத்தில் தான் எசேக்கியேல் கைது செய்யப்பட்டு கைதியாக பாபிலோனுக்கு கொண்டுப் போகப்பட்டான்.(எசே 1:1-3)

c. **நேபுகாத்நேச்சரின் பற்றி குறிப்பு:**

i. **நேபுகாத்னேச்சர்** அல்லது **நெபுகத்நேசர்** II (*Nebuchadnezzar II*), கிமு 642 – கிமு 562) புது பாபிலோனியப் பேரரசின் தலைசிறந்த, மிக நீண்ட காலப் பேரரசராக விளங்கியவர். இவர் கிமு 587-இல் எருசலேம் நகரையும், யூதக் கோயிலையும் அழித்தவர். இஷ்தர் பெண் கடவுளுக்கு அழகிய கோயில் எழுப்பினார். இவர் பாபிலோன் நகரை மீண்டும் பொழிவுடன் கட்டி எழுப்பி, " தொங்கும் தோட்டம்" அமைத்தார்.



ii. நெபுகாத்நேசர் தனது தலைநகரில் அமைத்த கட்டிடங்கள் சுற்றிலும் அமைக்கப்பட்ட அனைத்து வகையான கட்டிட அமைப்புகளும் திட்டமிட்டு சுமார் 16 கிமீ சுற்றளவில் இரண்டு சுவர்களுக்கு இடையே பிரமாண்டமான இஷ்தர் கோயில் நுழைவாயில் அமைத்து பாதுகாப்பாக அமைக்கப்பட்ட நகரமாக நிறுவினார். இவர் மேலும் ஒரு பெரிய அழகான புகழ்பெற்ற அரண்மனையை கட்டினார். அது, **தி மார்வெல் ஆப் தி மேன்கைண்ட்** என்று



அழைக்கப்பட்டது. மேலும் இவர் பாரசீக வளைகுடாவில் ஒரு கப்பல் துறைமுகத்தை முதன்முதலில் அமைத்து உலகப்புகழ் பெற்றார்.

3. நோக்கம் மற்றுத் மைய கருத்து:

   a. இந்த புத்தகத்தின் நோக்கமாக இரண்டு காரியங்களை நாம் கூற முடியும், அதாவது "**நியாயத்தீர்ப்பும், நம்பிக்கையும் (Judgment and hope).** தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதா மீது வந்தது எனவும் (எசே5:5-11), தேவன் மீது நம்பிக்கையாயிருந்து அவரிடம் மனந்திருப்புவதன் மூலமாய் ஆசிர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியும்(எசே 36:21-24) எனவும் இந்த புத்தகம் நமக்கு கூறுகிறது.

   b. "நானே கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசே 6:7) – இந்த வார்த்தை இந்த புத்தகத்தில் 60 – முறைக்கு மேலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எசே 25:7,11,17)

4. புறக்குறிப்பு:

   a. எசேக்கியேலின் அழைப்பு (அதிகாரம் 1-3)

   b. யூதாவின் மீது தேவனின் நியாயத்தீர்ப்பு (அதிகாரம் 4-24)

   c. மற்ற நாடுகளின் மீது தேவனின் நியாயத்தீர்ப்பு (அதிகாரம் 25-32)

   d. இஸ்ரவேலை மறுபடியும் மீட்டளிப்பு (அதிகாரம் 33- 48)

# பாடம் 1

## (அதிகாரம் 1-3)

**“உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு காவலாளனாக வைத்தேன்” – (3:17)**

எசேக்கியேல் பாபிலோனுக்கு கைதியாக கொண்டுப்போகப்பட்ட போது அவர் தேவனால் அழைக்கப்பட்டார்(எசே 1:1-3), இவரின் வேலை காவல் காப்பதாக இருந்தது, அந்நிய நாட்டில் யூதா ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யும் போது அவர்களை எச்சரிப்பதும், (3:18-20) தேவனுக்கு உண்மையாய் இருப்பவர்களை ஆறுதல்ப்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதும் எசேக்கியாவின் வேலையாக இருந்தது. ஆனால் எசேக்கியா கடினமான இருதயமுடைய மக்களின் மத்தியில் தேவன் கொடுத்த வேலையை செய்ய வேண்டியதாக இருந்தது (எசே 2:4), எசேக்கியாவின் அழைப்பையும், தன்னுடைய வேலையை எப்படி செய்ய வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை இந்த அதிகாரங்களில் நம்மால் பார்க்க முடிகிறது, தேவனுடைய ஊழியர்களாய் இருக்கிற நம்முடைய பொறுப்புகள் என்ன என்பதையும், இன்னும் தேவனுடைய ஊழியர்களாய் நாம் செய்ய வேண்டியது என்ன என்பதையும் போன்ற பல பாடங்களை நாம் இந்த அதிகாரங்களிலிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

I. தேவனுடைய மகத்துவத்தின் காட்சி: (அதிகாரம் 1)

குறிப்பு: இந்த அதிகாரத்தை வெளிப்படுத்தல் நான்காம் அதிகாரத்துடன் ஒப்பிட்டு பார்க்கவும்

1. நான்கு ஜீவன்களை பற்றிய காட்சியை எசேக்கியேல் பார்த்தல் (1:4-14)
    a. ஜீவன்களின் காட்சி விவரிக்கப்படுதல்(வ 10 = வெளி 4:6-10)
2. நான்கு முகங்களையுடைய ஒரு சக்சரத்தை எசேக்கியேல் பார்த்தல் (வெளி 1:15-25)
    a. சக்கரத்தை பற்றிய விவரிப்பு(1:15-20)
3. கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனம் (1:26-28)
    a. சிங்காசனம் (வ 26 = தானி 7:10; வெளி 4:2-6)
        i. தேவன் வீற்றிருக்கும் இடம் (1 இராஜா 22:19)
        ii. சிங்காசனம் எதை அடையாளப்படுத்துகிறது? (மத் 25:31; அப் 7:49; லூக் 22:30 = அதிகாரம், ராஜா, நியாயத்தீர்ப்பு)
            1. பார்க்கவும் சங் 99:1; சங் 115:3

2. நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ ?, யாரை தொழுதுக்கொள்கிறோமோ? அவர் சாதாரண நபர் இல்லை என்பதை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும் (ஏசா 29:16) தீர்க்கதரிசன புத்தகங்களில் நமக்கு கூறப்பட்டுள்ள தேவனுடைய மகத்துவத்தின் காட்சிகள் அவருடைய தன்மைகளையும், அவருடைய வல்லமைகளையும் நமக்கு காண்பிக்கிறதாய் இருக்கிறதோடு, நாம் அவருக்கு பயத்தவர்களாய் அவருடைய ஊழியத்தை உண்மையாகவும், பயத்துடனும் செய்ய வேண்டும் என்பதை நமக்கு காண்பிக்கிறது. தேவனுடைய வல்லமையின் காட்சியை பார்த்த ஊழியர்களின் பதில் செய்கை கவனித்து பாருங்கள்.

   a. ஏசாயா – ஏசா 6:1-5

   b. தானியேல் – தானி 10:5-10

   c. எசேக்கியேல் – எசே 1:28

   d. யோவான் – வெளி 1:17

3. நம்முடைய தேவன் மகா வல்லமை வாய்த்தவர் அவருக்கு நாம் செய்யும் வேலையை உண்மையாயும், பயத்துடனும் செய்ய வேண்டும். ( 1பேது 1:17)

**II. காவலாளனாக இரு (3:17; 38:7)**

1. எசேக்கியேல் தேவனுடைய மகத்துவத்தின் காட்சியை பார்த்த பின்பு அவரின் வேலை என்ன? என்பதை பற்றி தேவன் அவரிடம் கூறுகிறார் (அதி 2, 3)

   a. காவலான் (watch man)

      i. பொறுப்புடைய, பாதுகாக்கிற, எச்சரிக்கிற ஒருவன் (லூக் 2:8)

      ii. எசேக்கியேல் பொறுப்புடையவனாய் இருக்க வேண்டும்.

         1. தேவனுடைய வார்த்தையை தேவனுடைய ஜனங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் ( 2:3-8)

            a. கேட்டாலும், சரி கேட்கவிட்டாலும் சரி தேவனுடைய வார்த்தை சொல்ல வேண்டும் (வ 5, 3:11; 3:27)

b. தேவனுடைய வார்த்தையை கேட்பவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருத்தாலும் தேவனுடைய வார்த்தை பிரசங்கிப்பதும், போதிப்பது நம்முடைய வேலையாக இருக்கிறது. மனந்திருப்புவதும், மனந்திருப்பததும் அவர்களின் கடமையாக இருக்கிறது. (அப் 17:30-34)

i. விதை உவமை சிறந்த உதாரணம் (லூக் 8:5-15)

c. தேவனுடைய வார்த்தையை மறைந்து, அடங்கி வைப்பது ஆபத்தானது (எசே 3:18-27)

i. பவுலின் வார்த்தைகளை கவனியுங்கள் (அப் 18:6; அப் 20:26,27)

1. பவுலின் வாழ்நாள் முழுவதும் அவரு என்ன செய்தார் (அப் 28:30,31)

2. நாம் கற்றுக்கொண்ட சத்தியத்தை உண்மையுள்ள மனுஷர்களிடம் ஒப்புவிக்க வேண்டும் (2 தீமோ 2:2)

ii. நாம் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்க வேண்டும் (2 கொரி 2:14-16)

iii. பேதுருவின் வார்த்தைகள் (அப் 5:28,29)

iv. அப்பொல்லோ (அப் 18:24-28)

iii. புசி, பேசு (3:1-3)

1. எசேக்கியேல் தேவனுடைய வார்த்தையை புசிக்க வேண்டும் என தேவன் அவனுக்கு சுருளை கொடுத்தார், அது எசேக்கியேலுக்கு தேனைப்போல திருப்தியாயிருந்தது.

a. யோவானுக்கு சொல்லப்பட்டது போலவே (வெளி 10:9,10)

i. தேவனுடைய வார்த்தை நமக்குள் இருக்கிறதாக இருக்க வேண்டும் (வ 3; எரே 15:16; சங் 119:131)

ii. பார்க்கவும் – ரோம 10:8; 2 கொரி 3:3

iii. நமக்குள் தேவனுடைய வார்த்தை இல்லாமல், மற்றவர்களிடம் தேவனுடைய வார்த்தையை ஏற்ப்படுத்த முடியாது (தீத் 2:1=7)

iv. நாம் சாப்பிட்ட உணவு நமக்கான ஆற்றலாக மாறி நம்மை இயங்க வைக்கிறதோ, அதைப்போலவே தேவனுடைய வார்த்தை நமக்குள் இருந்து நம்மை இயக்க வைக்க வேண்டும்.

பாடம் 2

(அதிகாரம் 4-24)

“நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்” (5:7)

இஸ்ரேவல் ஜனங்கள் தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்ததாலும், விக்கிரகாரதனை செய்து தேவனுக்கு தூரோகம் செய்ததாலும் (2:3), மற்ற புறஜாதிகளை பாரக்கிலும் அதிகமான பாவங்கள் செய்தபடியாலும் தேவனைடைய நீதியான தீர்ப்பு இஸ்ரவேல் மேல் வரும் என தேவன் எசேக்கியேல் மூலமாய் கூறுகிறார் (5:5-9), இதன் மூலமாய் கர்த்தராகிய என்னை அவர்கள் அறிந்துக்கொள்வார்கள் என தேவன் கூறுகிறார் (6:7), இந்த அதிகார பகுதிகளில் பல காட்சிகளை எசேக்கியேல் பார்க்கிறார். எசேக்கியேல் தரிசனத்தில் எருசலேமுக்கு பயணமாக போகிறார் (அதி 8- 11); உண்மையற்ற மனைவியை கொண்டு சொல்லப்படும் ஒப்புமை (அதி 16); எசேக்கியேலின் தனிப்பட்ட வாழ்க்கை (அதி 14) போன்ற காரியங்களை நாம் பார்க்கிறோம் என்றாலும் தேவனை விட்டு பின்வாங்குகிற ஒருவரின் நிலை எப்படிபட்டதாக இருக்கும் என்கிற பாடத்தை இந்த பகுதிகள் நமக்கு தருகிறது.

1. தேவனை விட்டு பின்வாங்கும் இருதயம் (6:9)
    a. பொல்லாத இருதயம் (எபி 3:12)
        i. புறஜாதிகளின் பாவத்தை பார்க்கிலும் இஸ்ரவேல் ஜனங்களின் பாவம் மோசமானதாக இருந்தது(5:6)
            1. கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்த தவறை செய்ய கூடும்
                a. கொரிந்து சபையார் ( 1கொரி 5:1)
                b. தேவனுடைய பிள்ளைகளால் தேவனுடைய நாமம் தூசிக்கப்பட கூடாது (ரோம 2:24)
                c. நாம் மற்றவர்களுக்கு ஒளியாக இருக்கிறோம். (மத் 5:16), நாம் நல்நடக்கை உள்ளவர்களாய் நடத்துக்கொள்ள வேண்டும் (1 பேது 2:12)
            2. ஒருவர் தேவனை விட்டு விலகுவதற்கு என்ன காரணங்கள் இருக்க கூடும்?
    b. தேவனைவிட்டு விலகியாதற்கான பலனை இஸ்ரவேல் ஜனங்கள் அநுபவிக்க வேண்டியதாக இருந்தது (அதி 6)
        i. தேவனை விட்டு விலகிப்போகுதல் என்பது அவரை கோபப்படுத்தும் செயலாக இருக்கிறது. (எபி3:15-19)

ii. எபிரெயர் 11:9-11